# திடன் கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. லூக் 9 : 22

**அந்நேரம் முதல் அந்த ஸ்திரி சொஸ்தமானாள்.**

எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே,

வேதத்தில் இப்படி எழுதியிருக்கிறதே என ஆனந்தம் கொள்வதை விட, இந்நேர முதல் நான் சொஸ்தமாகிறேன் என்று நீங்கள் விசுவாச அறிக்கை செய்வதை தேவன் விரும்புகிறார்.

ஒரு தகப்பன் தன்னைப் போல தன் பிள்ளையும் வர வேண்டும் என்று நினைப்பது போல, நம்முடைய பரம பிதாவும் நம்மைக் குறித்தும் அப்படியே விரும்புகிறார்.

ஜெப ஆலய தலைவனை நோக்கி, **"விசுவாசமுள்ளவனாயிரு"**

என்று அருமை ஆண்டவர் **மாற்கு 5 : 36** ல் கூறினார்.

**மாற்கு 11:22ல் இயேசு கூறினார் "தேவனிடத்தில் விசுவாசமுள்ளர்களாயிருங்கள்"என்றார்.**

**யோவான்11 : 40** ல் இயேசு கூறினார் "நீ விசுவாசித்தால், தேவனுடைய மகிமையைக் காண்பாய்" என்பதாக.

என் அன்பு சகோதரனே, சகோதரியே,

இந்த மாதத்தில் **"நீ தேவனுடைய மகிமையைக் காண்பாய்"**

இந்த மாதத்தில் உங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணுங்கள்.

விசுவாச வாழ்க்கையில் சாட்சி கூறுதலும் அல்லது அறிக்கை செய்தல் ஒரு பிரதான பகுதி ஆகும்.

உன்னுடைய விசுவாசத்தை வலுப்படுத்தவும், உறுதியான விசுவாசமாக மாற்றப்படவும் வேண்டுமானால்,

1. அடிக்கடி கர்த்தர் உனக்கு என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதை கூறு. 2. தேவனுடைய வார்த்தை உன்னைப் பற்றி என்ன சொல்லுகிறது என்பதை கூறு. 3. மேலும், நீ தேவனைப் பற்றி பேசு. 4. இயேசுவே உன்னுடைய வாழ்க்கையில் பெரியவராக இருக்கட்டும். 5. தேவனுடைய வசனம் உன்னைப் பற்றி உன்னுடைய சூழ்நிலைகளைப் பற்றி என்ன சொல்கிறது என்பதை அறிக்கை செய்.

ஒருவேளை உடனே உனக்கு நம்பிக்கை வராவிட்டால் கூட பரவாயில்லை. அறிக்கை செய்.

**ரோமர் 10 : 17 கூறுகிறது.**

**6**. விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் என்பதாக.

இந்த வசனத்தை அடிக்கடி அறிக்கை செய்யுங்கள். உங்கள் உதடுகளினால் சொல்லுகிற வசனத்தை கேட்கும் போதே அடிக்கடி அறிக்கை செய்யுங்கள். திடீரென உங்கள் இருதயத்தை விசுவாசம் நிரப்பும். உங்கள் இருதயத்தில் நம்புகிறதும், வாயினால் அறிக்கை செய்கிறதுமான காரியத்தை பெற்றுக் கொள்வீர்கள்.

**மாற்கு 11 : 23 சொல்கிறது.**

எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து, நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்பதாக.

**கீழ்கண்ட குறிப்புகளை மனதில் வைத்து அறிக்கை செய்யுங்கள்.**

1. கிறிஸ்துவுக்குள் நான் யார் ?
2. கிறிஸ்துவுக்குள் எனக்கு என்ன இருக்கிறது ?
3. கிறிஸ்துவினால் நான் என்ன செய்ய முடியும் ?
4. சரீர தேவைகளுக்காக.
5. தேவ வழிநடத்துதலுக்காகவும், ஞானத்திற்காகவும்
6. உங்கள் கவலைகள் பயங்கள் நீங்கும்.

இப்பொழுதே ஆரம்பியுங்கள். தினமும் அறிக்கை செய்யுங்கள். உங்கள் மீட்பை உண்மை என நிரூபியுங்கள். கர்த்தருடைய வார்த்தையை உங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்ளுங்கள். ஆமென்.

**திடன் கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது.**

இயேசு கிறிஸ்து கானானீய ஸ்திரியின் விசுவாசத்தைப் பார்த்து, இஸ்ரவேலருக்குள் இப்படிப்பட்ட விசுவாசத்தை நான் காணவில்லை என சுற்றி இருந்தவர்களை பார்த்து கூறினார்.

எவ்வளவு மேன்மையான சாட்சி. இந்த சாட்சி உனக்கு வேண்டாமா ?

இயேசுவே நம்மை பார்த்து, இப்படிப்பட்ட விசுவாசத்தை நான் காணவில்லையே என்று சொன்னால், எவ்வளவு மேன்மையாக இருக்கும். **திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது.**